<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 53/2025</u>

<u>LW : 7 PW : 6</u>

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பன்னீர்செல்வம் | த / பெ. | திரு. குழந்தைவேலு |
| கிராமம் | : | அஷேசம் | தாலுக்கா | மன்னார்குடி |
| தொழில் | : | கூட்டுறவு சார்பதிவாளர் (ஓய்வு) | வயது | 68 |

<u>**எதிரிகள் 1 மற்றும் 2 வரை ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி பன்னீர்செல்வத்தை பொருளாதார குற்றப்பிரிவு தலைமை காவலர் A. பிரசன்னா HC No. 631 அடையாளம் காட்டினார்.**</u>

<u>**முதல்விசாரணை**</u>

நான் மன்னார்குடி தாலுக்கா அஷேசத்தில் வசித்து வருகிறேன். நான் B.A வரை படித்துள்ளேன். நான் பணியில் சேர்ந்த பதிவு உயர்வு பெற்று இன்று 25.08.2005 ல் கூட்டுறவு சார்பதிவாளராக பதவி உயர்வு பெற்று மன்னார்குடி நகர வங்கியில் தனி அலுவலராக பணிபுரிந்து வந்தேன். பின்பு மேலும் 08.03.2013 மன்னார்குடி தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணைய அலுவலராக மண்டல அலுவலராக பணிபுரிந்த போது என்னை T 1488 பாமணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் நடைப்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக மன்னார்குடி கூட்டுறவு சங்கத்தின் துணை பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க. 242/2015 தொ.வே.சா. 28.01.2018 ல் உத்தரவின் படி புதுக்கோட்டை மண்டல இணை பதிவாளர் கடிதம் ந.க. எண் 1/2015 இ.ப. நாள் 08.05.2015 ல் விசாரணை அலுவலர் தொடர்பு படுத்தி 01.04.2015 முதல் 31.12.2014 வரையிலான காலத்தில் மேற்படி சங்கத்தில் 1. விவசாய கடன் , 2. கூட்டு பொறுப்பு கடன் , 3.மத்திய காலக்கடன், 4. விவசாய நகைகடன், 5. பொது நகைகடன், 6.

உறுப்பினர் சேமிப்பு கடன் உறுப்பினர் சேமிப்பு கணக்குகளில் இறுதி நிலுவை இனங்கள் 7.உரம் கொள்முதல் விற்பனை இறுதி இருப்பு, 8. விதை நெல் கொள்முதல் விற்பனை தொகை செலுத்தாது, 9. தஞ்சாவூர் சங்க அளவிலான காசுக்கடன் நிலுவை காணப்படும் ஆதாரங்கள் ஆதாரம் குறைப்பு, 10. நகைக்கடனிற்கு உரிய வட்டி குறைவாக வசூல் செய்யப்பட்ட கடன், 11. காலவாதியான விவசாய கடன்கள் ஆகிய இனங்களில் கூட்டுறவு சட்டப்பிரிவு 1923 ஆண்டு பிரிவு 81 ன் கீழ் விசாரணை மேற்கொள்ள நியமனம் செய்ய உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி நான் T1488 பாமிணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கு 29.01.2015 ந் தேதி சென்று ஆவணங்களை கைப்பற்றி என் விசாரணையை துவக்கினேன். அப்போது சங்க செயலாளர் (பொறுப்பு ) N. தினகரன் M. சுரேஷ் உர விற்பனையாளர், V. குமார் சங்க எழுத்தராகவும், சங்கத்தின் தலைவராக R. ஜெயபால் என்பவரும் அவரின் கீழ் 10 நிர்வாக குழு உறுப்பினர்களும் பணிபுரிந்து வந்தனர். மேலும் எதிரி 1 சங்க செயலாளர் பொறுப்பு N. தினகரனுக்கு சங்க தீர்மானப்புத்தக நகலின் தீர்மான நாள் 06.08.2011 ந் தேதியில் செயல் முறை ஆணையர் , கடமைகளும், பொறுப்புகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதில் இவர் சங்கத்தின் அனைத்து வரவு செலவு கணக்கு முழு பொறுப்பாவர் எனவும் வரவுக்கு கையொப்பம் இடவும் K.CC. கடன் வழங்குதல், நகைக்கடன் வழங்குதல், கணக்கு பராமரித்தல், நகை பெட்டகம் சாவி இவரது பொறுப்பில் சங்க கையிருப்புக்கு முழு பொறுப்பு எனவும், கடன் வசூல் செய்தல், மத்திய வங்கிக்கு புள்ளிவிவரங்கள் தாக்கல் செய்தல் போன்ற பணிகளை அதிகார பெற்ற அலுவலர் என்ற இடத்தில் செயலாளர் பொறுப்பில் கையொப்பம் இடவும் இவருக்கு அதிகாரம் அளித்து கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் **வரிசை எண்.5 சங்க பணியாளர்களுக்கு கடமைகளும் பொறுப்புகளும் நிர்ணயிக்கபட்ட செயல்முறை ஆணை ஆவணம் அ.த.சா.ஆ. 21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அந்த ஆவணத்தில் கையொப்பமிட்ட சங்க செயலாளர் (பொறுப்பு) தினகரன், உர விற்பனையாளர் எம். சுரேஷ் மற்றும் சங்க எழுத்தர் வி. குமார் ஆகியோர்கள் அவர்களது பணி விவரங்கள் என்ன என்பதை ஆவணத்தின் அடிப்படையில்

ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்கள். சங்க தீர்மானப்புத்தகம் வரிசை எண் 6 பக்கம் 43, 44, 45 ல் வரவு செலவு கணக்குகளை தலைவர் மற்றும் செயலாளர் கூட்டாக வரவு செலவுகள் செய்வது என தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

என்னிடம் காட்டப்படுவது அந்த தீர்மானம் 4 மட்டும் ஆகும். அது **அ.த.சா.ஆ. 22 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி விசாரணை களத்தில் மேலும் 3 மாத காலங்கள் (28.04.2015 முதல் 27.07.2015 வரை) நீட்டிக்கப்பட்டது. விசாரணை மேற்கொண்டு மொத்தம் 17 இடங்களில் நடைபெற்ற கையாடல் தொகை கூடுதல் சுமார். ரூ. 64,64,531/- கையாடல் நடைபெற்றுள்ளது. இதுகுறித்து சங்க செயலாளர் தினகரன், உர விற்பனையாளர், எம் சுரேஷ், சங்க எழுத்தர் வி.குமார், சங்க தலைவர் ஜெயபால், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி, மன்னார்குடி கிளையில் கள மேலாளர் வினோதகன், T. செந்தில்குமார்,

D. செந்தில்குமார், சங்க தணிக்கையாளர் ராஜேந்திரன் ஆகியோர் மீது குற்ற நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்து எனது விசாரணை அறிக்கையை 05.08.2015 ல் மன்னார்குடி துணை பதிவாளர் அவர்களிடம் சமர்ப்பித்தேன். அந்த பிரிவு 81 விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ. 23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**என்னால் கண்டுபிடிக்கப்பட்ட கையாடல் விவரங்கள்**

உர ரொக்க விற்பனை தொகையை சங்க கணக்கில் கொண்டு வராமல் கையாடல் செய்த தேதி , தொகை மற்றும் நபர்களின் விவரங்களை குறிப்பிட்டு என்னால் 05.08.2015 ந் தேதி மன்னார்குடி கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் அவர்களுக்கு நான் கொடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கையாடல்களின் விவரங்களுக்கான பாமணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் பதிவேடு உர விற்பனை சிட்டா பதிவேட்டில் வரிசை எண் 12 பக்கம் 31 முதல் 65 வரை பல்வேறு தேதிகளில் பல்வேறு தொகைகள் பல்வேறு வழிமுறைகளில் உரவிற்பனை தொகையை சங்க கணக்கில் கொண்டு வராமல் தினகரன் மற்றும் சுரேஷ் என்பவர்களால் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டது. அதில் கையாடல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ. 3,82,556/-

**அந்த பதிவேட்டில் உள்ள விவரங்கள் பல்வேறு தேதிகளில் இருப்பதால் கீழ்க்கண்டவாறு குறியீடு செய்யப்படுகிறது. பாமணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் பதிவேடு உர விற்பனை சிட்டா பதிவேட்டில் வரிசை எண் 12 பக்கம் 31 முதல் 65 வரை அ.த.சா.ஆ. 24 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 27.08.2014 ல் விதை நெல் விற்பனை தொகை விற்பனையாளரிடமிருந்து பெற்றிருந்தும் கூட கணக்கிற்கு கொண்டு வராமல் கையாடல் செய்ததை விதை நெல் விற்பனை சிட்டா பதிவேடு வரிசை எண் 13 பக்கம் 3 ல் ரூ.25,690/- கையாடல் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளது. **விதை நெல் விற்பனை சிட்டா பதிவேடு வரிசை எண் 13 பக்கம் 3 அ.த.சா.ஆ. 25 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

விதை நெல் விற்பனை சிட்டா பதிவேடு வரிசை எண் 14 ல் பல்வேறு தேதிகளில் பல்வேறு தொகைகள் பல்வேறு வழிமுறைகளில் விதை நெல் விற்பனை தொகையை சங்க கணக்கில் கொண்டு வராமல் தினகரன் மற்றும் சுரேஷ் என்பவர்களால் கையாடல் செய்யப்பட்டுள்ளது என்று கண்டறியப்பட்டது. அதில் கையாடல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூ.2,96,410 /- **விதை நெல் விற்பனை சிட்டா பதிவேடு வரிசை எண் 14 அ.த.சா.ஆ. 26 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

வரிசை எண்.20 உர விற்பனை புத்தகம் பில் எண்.185249 நாள் 20.03.2013 ந் தேதிய உள்ள விற்பனை தொகையை கணக்கில் கொண்டு வராமல் கையாடல் செய்துள்ள மொத்த தொகை ரூ. 27,360/- **வரிசை எண்.20 உர விற்பனை புத்தகம் பில் எண்.185249 அ.த.சா.ஆ. 27 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 21.11.2013, 07.12.2013 மற்றும் 30.10.2014 ஆகிய தேதிகளில் சங்க பணியாளர்களுக்கு கடன் வழங்காமலேயே கடன் வழங்கியதாக பொய்யாக ரொக்க புத்தக வரிசை எண் 7 பக்கம் 68 ல் கணக்கு எழுதி சங்க நிதியை கையாடல் செய்த

மொத்த தொகை ரூ. 4,60,000/- **ரொக்க புத்தக வரிசை எண் 7 பக்கம் 68 அ.த.சா.ஆ. 28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 21.11.2013, 07.12.2013 மற்றும் 30.10.2014 ஆகிய தேதிகளில் சங்க பணியாளர்களுக்கு கடன் வழங்காமலேயே கடன் வழங்கியதாக பொய்யாக ரொக்க புத்தக வரிசை எண் 7 பக்கம் 75 ல் கணக்கு எழுதி சங்க நிதியை கையாடல் செய்த மொத்த தொகை ரூ. 3,00,000/- **ரொக்க புத்தக வரிசை எண் 7 பக்கம் 75 அ.த.சா.ஆ. 29 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

கடந்த 30.10.2014 தேதியில் சங்க பணியாளர்களுக்கு கடன் வழங்காமலேயே கடன் வழங்கியதாக பொய்யாக ரொக்க புத்தக வரிசை எண் 9 பக்கம் 51 ல் கணக்கு எழுதி சங்க நிதியை கையாடல் செய்த மொத்த தொகை ரூ. 2,02,000/- **ரொக்க புத்தக வரிசை எண் 9 பக்கம் 51 ல் கணக்கு அ.த.சா.ஆ. 30 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.03.04 10:37:23 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்